தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ச. கார்த்திகேயன் Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-5-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## சின்ன வெங்காயத்தை இருப்பு வைத்து விற்கலாம்

இந்தியாவில் பயிராகும் முக்கிய வாணிபப் பயிர்களில் வெங்காயமும் ஒன்றாகும். உலகளவில் வெங்காய உற்பத்தியில் இந்தியா 19.9 சதவீத பங்களிப்புடன் இரண்டாமிடம் வகிக்கிறது. 2013-14ஆம் ஆண்டில் இந்தியாவின் வெங்காய உற்பத்தி கடந்த ஆண்டைக் காட்டிலும் 8 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்தியாவில் மகாரஷ்டிரா, உத்திரப்பிரதேசம், ஒரிஸா, கர்நாடகா, தமிழ்நாடு, மத்தியப்பிரதேசம், ஆந்திரா மற்றும் பீகார் ஆகியன வெங்காயம் பயிரிடும் முக்கிய மாநிலங்களாகும்.

இந்தியாவிலிருந்து வெங்காயம் வட ஆப்பிரிக்கா, மேற்கு ஆசியா, இலங்கை, மலேசியா மற்றும் சிங்கப்பூருக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. 2013-14 (ஏப்ரல்-ஜனவரி) ஆம் ஆண்டில் வெங்காய ஏற்றுமதி 1.1 மில்லியன் டன்களாகும். இது கடந்த ஆண்டு ஏற்றுமதியான 1.5 மில்லியன் டன்களைக் காட்டிலும் 28 சதவீதம் குறைவாகும். மத்திய அரசின் தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தின் கணக்கீட்டின் படி 2012-13ல் தமிழ்நாட்டின் வெங்காய பரப்பு மற்றும் உற்பத்தி முறையே 0.38 இலட்சம் எக்டர் மற்றும் 4.29 இலட்சம் டன்களாகவும் உள்ளது. இது கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் பரப்பில் 1.6 சதவீதம் அதிகரித்தும் உற்பத்தியில் 22.8 சதவீதம் குறைந்தும் காணப்படுகிறது. 2011-12 ஆம் ஆண்டில் வெங்காய பரப்பு மற்றும் உற்பத்தி முறையே 0.37 இலட்சம் எக்டர் மற்றும் உற்பத்தி 5.56 இலட்சம் டன்களாகும்.

இந்தியாவின் மொத்த வெங்காய சாகுபடி பரப்பில் தமிழ்நாடு 5 சதவீத பங்களிக்கிறது. இதில் 70 சதவீத பரப்பில் சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. சின்ன வெங்காய மொத்த உற்பத்தியில் 90 சதவீதம் தமிழ்நாடும் மற்றும் 10 சதவீதம் கர்நாடகாவும் பங்களிக்கிறது. மொத்த உற்பத்தியில் தமிழகம் மற்றும் கேரளாவில் நுகரப்பட்டு மேலும் உபரி சின்ன வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டு (2013) செப்டம்பர் முதல் நவம்பர் வரை சின்ன வெங்காயம் கிலோவிற்கு ரூ.45 முதல் ரூ.80 வரை விற்கப்பட்டது. இத்தகைய விலையேற்றத்திற்கு காரணம் கடந்த ஆண்டுகளில் நிலவிய கடும் வறட்சி மற்றும் உள்நாட்டு தேவை

அதிகரித்ததே ஆகும். கர்நாடகாவிலிருந்து டிசம்பர் முதல் ஏப்ரல் வரை சின்ன வெங்காய வரத்தினால் விலை கிலோ ரூ.15 வரை சரிந்துள்ளது. மேலும் கர்நாடகா வரத்து ஏப்ரல் மாதத்தில் முடிவடைந்தாலும் புதிதாக அறுவடையான சின்ன வெங்காயம் திண்டுக்கல், பெரம்பலூர், திருச்சி, திருப்பூர், கோயம்புத்தூர், தேனி மற்றும் மதுரை மாவட்டங்களிலிருந்து வரத் துவங்கியுள்ளதாலும் தற்போது சின்ன வெங்காயம் கிலோவிற்கு ரூ.15 முதல் 20 வரை விற்கப்படுகிறது. புதிதாக அறுவடையான சின்ன வெங்காயம் வரத்து துவங்கியுள்ளதாலும், குறைந்த ஏற்றுமதியின் காரணமாகவும் சின்ன வெங்காயத்தின் விலை கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைவாக உள்ளது.

தைப்பட்டம் சின்ன வெங்காயம் பயிரிடும் முக்கிய பருவங்களில் ஒன்றாகும். இச்சூழலில் தமிழக சின்ன வெங்காய விவசாயிகள் அறுவடை செய்த பயிரை உடனடியாக விற்பதா அல்லது சேமித்து விற்பதா என்பதைத் தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளனர். எனவே விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 15 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் ஆராய்ந்தது. ஆய்வு முடிவுகளின் படி தரமான சின்ன வெங்காயத்தின் விலை குவிண்டாலுக்கு மே, 2014ல் ரூ.2300 முதல் ரூ.2500 வரை இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு தேவை அதிகரிக்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன. மேலும் சின்ன வெங்காயத்தை இருப்பு வைப்பதால் ஏற்படும் செலவு, எடை குறைவு மற்றும் வட்டி விகிதம் விலை உயர்வை கணக்கிடும் பொழுது குறைவாக இருப்பதால் விவசாயிகள் சேமித்து வைத்து மே மற்றும் ஜுன் 2014 மாதங்களில் விற்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:-</u>


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,<br>
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,<br>
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,<br>
கோயம்புத்தூர் - 641 003.<br>
தொலைபேசி எண்: 0422-2431405


<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-</u>


பேராசிரியர் மற்றும் தலைவர்,<br>
காய்கறிப் பயிர்கள் துறை,<br>
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,<br>
கோயம்புத்தூர் - 641 003.<br>
தொலைபேசி எண்: 0422-6611374 / 6611283


மக்கள் தொடர்பு அலுவலர்